முருகப்பெருமான் துணை

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

25.07.2024

1. கனி வேலவா கருணை வடிவான
கந்தனே ஞானபண்டிதனே
இனிமைபட உன் பெருமை பாடி
இயம்பிடுவேன் அரங்க மகான் யானும்

2. யானும் குரோதி நள்ளி திங்கள்
ஈராம் குருவார அருளாசி
ஞானமுடன் என் தொண்டர்கட்கு
நன்மை பெற உரைத்திடுவேன்

3. உரைத்திடவே பிரணவக் குடிலே
உலகை காக்கும் மீட்கும்
மறை போற்றும் ஞான சபை
மாதருமம் மகா சக்தியாக

4. ஆகவே ஆற்றல் பெருகி
அகிலமெங்கிலும் பரவி வர
வகைபட வணங்கி ஏற்று
வரவேற்று என் தொண்டர்கள் வழி

5. வழிதனில் உலக மக்களும்
வல்லமைபட தருமத்தின் வழி
அழியாமை தரும் சக்தி இதுவே என
அடையாளம் கண்டு தேறிட

6. தேறிட அரங்கன் என் நாமம்
தினம் தினம் நாம செபமாக
கூறிட இந்தவித தெளிவுதிடம்
குருவருள் ஞானமாக உருவாகி

7. ஆகியே சைவ நெறி வழி
அனைவரும் தேற்றமாகி
அகிலத்தின் அனைத்துயிர்க்கும்
அறிவிப்பேன் பாதுகாப்பு மதிப்பளித்து

8. அளித்துமே ஜீவதயவு பெருகிட
அரங்கமகான் என் ஜோதி
இணைத்திடும் ஆற்றல் கூடி
எல்லா மக்களும் ஞானிகளாக

9. ஆகவே கலியினில் சிறப்பர்
ஆக்கமுடன் அரங்கர் என் படையாக
செகமெங்கும் நிரம்பி இனிதே
சித்திமிகு ஞானசித்தர் காலமாக

10. காலமாக உலக மாற்றமதும்
கருணைமிக்க என் படைகள்
மூலமாக அற்புதம் நிகழும்
மொழிந்திட்ட அரங்கன் என் அருளாசி முற்றே.

–சுபம்–